Registered as a news paper. பக்கங்கள்: எட்டு விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆடி 20 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஐ.ஆகிர் 06 (05.08.2003) செவ்வாய்க்கிழமை இதழ்: 306

விரைவாகவும், துல்லியமாகவும்
உங்கள் இல்லங்களிலிருந்து
உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTERNET
மூலம் தொடர்பு கொள்ள
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில்
துரித தபால்/பொதிகள் சேவை
Sri Murugan
Tele Communication & Agency post Office
303, K.K.S.ROAD JAFFNA T.P.021 - 22 2670
FAX - 222 3214 email-del-srnskr @ evreka.lk
(சி.1136)

# கிழக்குப் பயண நிலைவரம் தொடர்பாக தமிழ்ச்செல்வன் - பிரபாவுக்கு விளக்கம்

## வன்னி திரும்பியதும் சந்தித்துப் பேசினார்

(கிளிநொச்சி)

**கிழக்குப் பிராந்தியத் தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள், பொது மக்களுடன் நிலைமையை ஆராய்ந்துவிட்டு, நேற்றுக்காலை வன்னிக்குத் திரும்பிய அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் -**

**தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரனுக்கு, கிழக்குப் பகுதி நிலைவரம் குறித்து விளக்கிக் கூறினார்.**

நேற்றுக்காலை 10 மணியளவில் ஹெலி மூலம் கிளிநொச்சியை வந்தடைந்த தமிழ்ச்செல்வன், உடனடியாகத் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்து கலந்துரையாடியதாகத் தெரியவருகிறது.

இந்தச் சந்திப்பின் பின்னர், எமது செய்தியாளருக்குத் தகவல் வெளியிட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்,

திருமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் மேற்கொண்ட விஜயத்தின்போது - நேரில் கண்ட விடயங்கள் குறித்தும், தெரிந்துகொண்ட விடயங்கள் குறித்தும், தளபதிகள், போராளிகள், பொதுமக்களுடனான சந்திப்புக்களில் தெரிவிக்கப்பட்ட

(08 ஆம் பக்கம் பார்க்க)



கிழக்கு விஜயத்தை முடித்து கிளிநொச்சி திரும்பிய தமிழ்ச்செல்வன்.

## அரசாங்கத்தின் யோசனைக்கு எதிராக தென்னிலங்கையில் பலமான கூட்டணி!

### திலக் கருணாரட்ண தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் இடைக்கால நிர்வாக கட்டமைப்பு தொடர்பான யோசனை, நாட்டை இரண்டாகத் துண்டாடுவதற்கான அதிகாரபூர்வமான ஆவணம் என, தேசிய சங்கப் பேரவை குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்த நிலையை எதிர்கொள்வதற்காக, தேசிய கூட்டமைப்பொன்றை உருவாக்கப் போவதாக சிஹல உறுமய தெரிவித்துள்ளது.

நேற்று, கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே, இந்தக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு தொடர்பாக, அரசாங்கம் புலிகளிடம் சமர்ப்பித்துள்ள யோசனைகள் குறித்து தெளிவுபடுத்தும் முகமாக - தேசிய சங்கப் பேரவை இந்த ஊடகவியலாளர் மாநாட்டிற்கு ஏற்பாடு செய்திருந்தது.

நாடு தற்போது தெளிவாக இரண்டாகப் பிரிந்துள்ளது. இரண்டு அரசுகளை உருவாக்குவதற்கான இறுதி ஆவணங்கள் கைச்சாத்திடும் நிலை தற்போது ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்த சிஹல உறுமயவின் பிரதிநிதி - இடைக்கால நிர்வாக யோசனைகள் குறித்த ஆவணப் பிரதிகள், அரசாங்கத்தினால் - ஜனாதிபதிக்கும், விடுதலைப் புலிகளுக்கும் நோர்வே அரசாங்கத்திற்கும் அனுபபி வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார்.

எனினும் இந்த ஆவணங்கள்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## கூரை மீது ஏறியிருந்து கைதி உண்ணாவிரதம்!

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு, களுத்துறை சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதி ஒருவர் - தொடர்ந்தும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார். இவர், சிறைச்சாலைக் கட்டடத்தின் கூரைமீது ஏறி, உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளதாக களுத்துறை சிறைச்சாலை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு - தடுத்து வைக்கப்பட்டுள்ள இவர், தமக்கு எதிரான வழக்கை துரிதப்படுத்துமாறு அல்லது விடுதலை செய்யுமாறுகோரியே, இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக சிறைச்சாலை அதிகாரி தெரிவித்தார்.

இதுகுறித்து, சிறைச்சாலை ஆணையாளர் ரூமி மர்சூக் தெரிவித்தபோது, 8 வருடங்களாக இந்தக் கைதி தடுத்து (08 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை - மூதூரில் நேற்றும் துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் பலி!

திருகோணமலை மாவட்டத்திலுள்ள - மூதூர் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர், நேற்று சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்று அதிகாலை 2 மணியளவில், மூதூர் ஆலய வீதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், ஒரு பிள்ளையின் தந்தையான குணம் சுபாஸ்கரன் (வயது 28) என்பவரே, துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்தவராவார்.

இவர் வீட்டின் அறையில் படுத்திருந்தவேளை திறந்திருந்த யன்னலின் ஊடாக இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில், படுக்கையிலேயே மரணமடைந்தார்.

இவரது சடலம் மூதூர் மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு, விசாரணையின் பின் அவரது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (4,10)

## சமாதான முயற்சிகள் தொடர்பாக ஜப்பானிய பிரதி அமைச்சர் ரணிலைச் சந்தித்துப் பேச்சு!



(கொழும்பு)

ஜப்பானின் வெளிவிவகார சிரேஷ்ட துணை அமைச்சர் டெட்சுரோ யானோ, பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவை நேற்று சந்தித்துக் கலந்துரையாடினார். இந்த சந்திப்பின்போது, நாட்டின் தற்போதைய சமாதான நடவடிக்கைகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டதாகத் தெரியவருகிறது.

யானோ, நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்திற்கு மேற்கொண்ட விஜயத்தின்போது, ஆராயப்பட்ட விடயங்கள் குறித்தும் - பிரதமருடன் கலந்துரையாடினார். அத்துடன், சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு ஜப்பான் அரசு பூரணஒத்துழைப்பை வழங்குமென்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, நேற்றுக்காலை காணி அமைச்சர் ராஜித சேனாரத்னவையும், சந்தித்த ஜப்பானிய வெளிவிவகார சிரேஷ்ட துணை அமைச்சர் யானோ, காணி தொடர்பாக மேற்கொள்ளப்படும் செயறதிட்டங்களுக்கு உதவிவழங்க இணக்கம் தெரிவித்துள்ளார்.

மாத்தறை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தவுள்ள நீர்ப்பாசன திட்டத்திற்கான ஒப்பந்தமும், நேற்று டெட்சுரோ யானோ தலைமையில் கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தத்திற்கு அமைய, ஜப்பான் அரசினால் 1872 மில்லியன் ரூபா நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, வெளிவிவகார பிரதி அமைச்சர் லால் தர்மப்பிரியவையும், சந்தித்துக் கலந்துரையாடிய யானோ, இரு நாடுகளுக்கும் இடையிலான விமானப் பயணங்களை அதிகரிப் (08ஆம் பக்கம் பார்க்க)

## உயிர்த்தியாகம் செய்தாவது ஜே.வி.பியுடன் உடன்படிக்கை!

### அனுரா பண்டாரநாயக்க கூறுகிறார்

(கொழும்பு)

உயிர்த்தியாகம் செய்தாயினும், மக்கள் விடுதலை முன்னணியுடனான கூட்டமைப்பை உருவாக்க இருப்பதாக - பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

நாட்டைப் பாதுகாப்பதற்கான ஒரே வழி - மக்கள் விடுதலை முன்னணியுடன் கூட்டுச்சேர்வதேயாகும் என்று குறிப்பிட்ட அவர் -

அவ்வாறு இல்லையேல், நாடு படுபாதாளத்தில் வீழ்வதைத் தவிர்க்க முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 013602900 01360291
email . jaffna @ expoavi . com.
(சி -1139)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் தோழன்...

பவர் செலுலர் ட்ரேடிங் கம்பனி

I.D.D ஒரு நிமிட அழைப்பு 25/-

★யாழ்.நகரில் மேசைத்தொலைபேசியை முதன்முறையாக அறிமுகம் செய்த நிறுவனம். மக்களின் தோழன், உறவுகளின் பாலம், தொலைவில் வசிக்கும் உறவுகளுடன் அருகில் இருந்து உரையாடுவது போல் ஒரு துரிதசேவை.

வெளிநாட்டில் இருந்துவந்த உறவுகள் பிரிந்து செல்லும் வேதனையைத் தவிர்க்க வேண்டும் என்பதே எமது சேவை. கவலை வேண்டாம். எமது நிறுவனத்தின் துரிதசேவையால் உங்கள் உரையாடல்களைத் தொடருங்கள்.

எமது சேவை நகரத்திற்கும், கிராமங்களுக்கும் உடனுக்குடன் இணைப்புக்களுடன் பெற்றுத்தரப்படும்.

எமதுதொடர்புகளுக்கு:- 071 2399220, 0777 242416
0777 584896, 0712 384624
077 6090924, 0712 387172

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(ராஜா தியேட்டர் அருகில்) (சி-1315)

# குணமாக்கல் வழிபாட்டுக்கு அழைப்பு!

(நாயன்மார்கட்டு)

சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில், இன்று மாலை 5 மணிக்கு குணமாக்கல் வழிபாடு நடைபெறவுள்ளது.

அருட்தந்தை போல் றொபின்சன் தலைமையில் இடம்பெறும் இந்த வழிபாட்டில், அனைத்து மக்களையும் கலந்துகொண்டு பயன்பெறுமாறு-சுன்னாகம் புனித ஆலய பங்குத் தந்தை அழைப்புவிடுத்துள்ளார்.

இதேவேளை, இந்த வழிபாடு எதிர்வரும் வியாழக்கிழமையும், இந்த ஆலயத்தில் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (61)

# ஞாபகார்த்த நீர்த்தாங்கி திறந்து வைப்பு!

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் க.சின்னத்துரை அவர்களின் ஞாபகார்த்த நீர்த்தாங்கி திறப்புவிழா, நேற்று நண்பகல் 12 மணிக்கு பாடசாலையில் இடம்பெற்றது.

அதிபர் க.நடராசா தலைமையில நடைபெற்ற நிகழ்வில், சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப்பணிப்பாளர் தனபாலசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு நினைவுரையாற்றினார். (91)

# முகவர்களுக்கான கலந்துரையாடல்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டிலிருந்து கொழும்புக்கான சேவையில் ஈடுபடும் பஸ் வண்டிகளுக்கான ஆசனப் பதிவுகளை மேற்கொள்ளும் முகவர்களுக்கான முக்கிய கலந்துரையாடல்-நாளை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் சிற்றூர்திச் சங்கங்களின் இணையக் காரியாலத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் அனைத்து ஆசனப்பதிவுகளை மேற்கொள்ளும் முகவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு, விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியற்துறையின் தனியார் போக்குவரத்துப் பகுதியினர் கேட்டுள்ளனர். (ரா)

துரித தபால் பொதிகள் சேவை

உள்ளூர், வெளிநாடுகளுக்கான
சகல தபால்/பார்சல்கள் எதுவானாலும்
உடனுக்குடன் அனுப்புவதற்கு

Sri Murugan

Tele Communication & Agency Post Office
Computer Systems
303, K.K.S Road, Jaffna
T.P - 021- 222 2670
Fax -2223214 e-mail - jel - smskr @ eureka.lk
(சி-1312)

நம்பமுடியவில்லையா...!

பல வர்ணங்களில் இறபர் சீல்

★ சிவப்பு, பச்சை, நீலம், ஊதா, கறுப்பு என பல வர்ணங்களில் இறபர் சீல்.
★ மையில் அமர்த்தி, அச்சு அடிக்கத் தேவையில்லை. நேரடியாக அச்சடிக்கலாம்.
★ பல்லாயிரக்கணக்கான தடவைகள் பிரதி எடுக்கலாம்.
★ நீடித்த பல வருடப் பாவனை.
★ உங்கள் எண்ணம் போல் வடிவங்களில் அச்சுப் பெற தரமான, நேர்த்தியான, கவர்ச்சியான றபர் சீல்கள்.

இப்போது வடபகுதியில் நீங்கள் பெற

யசோ

35, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
T.P:-0777110610 (சி-1308)

நிறஞ்சனாஸ் சங்கானை

முரளி, தேவயானி நடித்த
காதலுடன்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்
RED SCORPION
இரவுக் காட்சி. 8.45 (பு.நே)
(சி-1285)

ராஜா யாழ்ப்பாணம்.

இலங்கையிலும், இந்தியாவிலும்
ஒரே தின வெளியீடு
மாதவன், ஜோதிகா, ஸ்ரீதேவி
நடித்த A.V.M இன்



பிரியமான தோழி
10.30, 2.30, 6.30, 9.30
ரிக்கெற் முற்பதிவு செய்து கொள்ளலாம். (சி-1284)
இயக்கம்: விக்ரமன்

MEDICAL CHECK UP
வைத்திய பரிசோதனை

நோய் வருமுன் காப்போம்
திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்

- 40 வயதிற்கு மேற்பட்ட நோயுள்ள, நோயற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச் செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்.
- X-RAY, ECG சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள், சிறுநீர்ப் பரிசோதனை இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்!

விபரங்களுக்கு நேரில்
போக்குவரத்து வசதி கருதி (சி-1311)

சம்பந்தர் மெடேர்ன் கிளினிக்
(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஓவ் (f) செற் முறையில் அச்சுப் பதித்து இப்போது உங்கள் தேவையை, தங்கள் சேவையாக கருதி – தரமாக, நேர்த்தியாக என்றும் தெளிவாகப் பார்க்க, பாதுகாக்க அச்சுப் பதித்துத் தருகிறார்கள்

சுரபி பதிப்பகத்தினர்

பத்திரிகைகள்
மலர்கள்
சஞ்சிகைகள்
பெரிய அளவிலான போஸ்ரர்கள்
துண்டுப் பிரசுரங்கள்
வைபவ அழைப்பிதழ்கள்
சமய சந்நிதான விழாக்கால போஸ்ரர்கள்

உங்கள் தேவை எதுவானாலும் நிறைவுடன் பெற்றுக்கொள்ள ஒருமுறை சுரபியை நாடுங்கள்.

குறைந்த கட்டணம்
குறுகிய தவணை

உங்கள் ஆக்கங்கள் உங்கள் வெளியீடுகள்
உங்கள் எண்ணக்கிடக்கைகள்
உங்கள் கற்பனை வளங்கள்

இவற்றிற்கு செயல் வடிவம்தான் சுரபியின் நேர்த்தியான கணினி தட்டெழுத்து அமைப்பும், தெளிவான அச்சுப்பதிப்பும்.

உங்கள் தெரிவு என்றும் ஒரே தெரிவாக இருக்கட்டும்.
அதுவே சுரபியாக இருக்கட்டும்.

சுரபி பதிப்பகம்
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 2223922 2225107

# அரச சேவைகள் ஆட்சேர்ப்பில் மொழித் தகைமை முக்கியம்!

(கொழும்பு)

அரச சேவைகளுக்கு ஆட்சேர்க்கும் வேளையில், தமிழ்மொழி தெரிந்த சிங்களவர்களுக்கும், சிங்கள மொழியில் தேர்ச்சியுள்ள தமிழர்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுவதுடன், பதவிகள் நிரந்தரமாக்கப்படும்போது, இத்தகைமைகள் கவனத்தில் கொள்ளப்படும் என, அரச கரும மொழிகள் ஆணைக்குழுவின் தலைவர் டி.யூ.குணசேகர தெரிவித்தார்.

ராஜகிரியவிலுள்ள அரச கரும மொழித் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்ற, அரச கரும மொழிக்கொள்கை அமுலாக்கல் தொடர்பான கருத்தரங்கில் உரையாற்றும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாடு முழுவதிலுமுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், செயலாளர்கள் கலந்துகொண்ட இந்தக் கருத்தரங்கில் -

மொழியானது - இனங்களுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்தக்கூடிய சிறந்த ஊடகமாகும் எனவும், அலுவலகப் பெயர்ப்பலகைகளை மூன்று மொழிகளிலும் வைத்தல், பொதுமக்களால் அதிகமாகப் பாவிக்கப்படுகின்ற படிவங்களை மூன்று மொழிகளிலும் தயாரித்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம் எனவும், அவர் மேலும் தெரிவித்தார்.

## தாய், சேய் சுகாதார மேம்பாட்டுக்கு ஜப்பான் 250 மில்லியன் ரூபா உதவி!

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில், தாய் - சேய் சுகாதார சேவைகளை மேம்படுத்துவதற்காக, ஜப்பானிய அரசாங்கம் 250 மில்லியன் ரூபாவை வழங்கத் தீர்மானித்துள்ளதாக, ஜப்பானிய தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கிற்கு அதனை அண்டிய மாவட்டங்களான - அநுராதபுரம், புத்தளம், மொனராகலை ஆகிய மாவட்டங்களில், தாய் - சேய் சுகாதார சேவையினை மேம்படுத்துவதற்காகவே, ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் ஊடாக, இந்த அவசர உதவி வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிதி மூலம், தாய் - சேய் உயிரிழப்புக்களைக் குறைக்கவும், சிறுவர் மற்றும் பெண்கள் மத்தியில் நிலவும் போஷாக்கின்மையைக் குறைக்கவும் வழிவகுக்கும் எனவும்,

இந்த உதவித் திட்டத்தின் மூலம் 10 பிரதான வைத்தியசாலைகளில், மகப்பேற்று மற்றும் குழந்தைகள் சிகிச்சைப் பிரிவினை ஆரம்பிக்கவும், புனரமைக்கவும், 28 ஆரம்ப சுகாதார நலன்புரிசேவை நிலையங்களில் தாய் - சேய் சேவைகள் மேம்படுத்தப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

### உள்துறை அமைச்சர் யாழ்ப்பாணம் வருகிறார்!

(கொழும்பு)

உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க, எதிர்வரும் 10 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரியவருகிறது.

யாழ்ப்பாணம், மன்னார்ப் பகுதி ஆயர்கள் விடுத்த வேண்டுகோளையடுத்தே, அமைச்சரின் இந்த விஜயம் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணத்தில், உள்துறை நிர்வாகம் - பொலிஸாரின் செயற்பாடு ஆகியவற்றை மீளமைக்கும் நோக்குடையதாக, அமைச்சர் ஜோன் அமரதுங்கவின் யாழ். விஜயம் அமையும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# கணினிப் பயிற்சி நிலையம் சேனையூரில் திறந்துவைப்பு!

திருகோணமலை மாவட்டத்திலுள்ள மூதூர் கிழக்கு, சேனையூரில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட கணினிப் பயிற்சி நிலையத்தை, விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கடந்த சனிக்கிழமை திறந்துவைத்தார்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கனேடியக் கிளையின் ஆதரவில், இந்தப் பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், தமிழீழத் தேசியக் கொடியை திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக் ஏற்றினார், திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பதுமன் - பயிற்சி நிலையத்தின் பெயர்ப் பலகையைத் திறந்து வைத்தார்.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் உட்பட பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.



தேசியக்கொடியேற்றும் திருமலை அரசியற்துறை பொறுப்பாளர் திலக்.



பயிற்சி நிலையத்தைத் திறந்து வைக்கிறார் அரசியற்துறைப் பொறுப்பாளர்




பெயர்ப் பலகையைத் திறந்து வைக்கிறார் தளபதி கேணல் பதுமன்.

# எமிரேட்ஸ் விமான நிறுவனத்துடன் இலங்கை அரசு ரகசிய ஒப்பந்தம்!

(கொழும்பு)

இலங்கை அரசும், எமிரேட்ஸ் எயர்லைன்ஸ் நிறுவனமும் இரகசிய ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளன.

இந்த ஒப்பந்தம் - ஜூன் மாதம் 02 ஆம் திகதி செய்யப்பட்ட போதிலும், இதுவரையும் அது தொடர்பான தகவல்கள் இரகசியமாகவே வைக்கப்பட்டிருந்தன.

இந்த இரகசிய ஒப்பந்தத்தில், நிதி அமைச்சின் செயலாளர் சரித்த ரத்வத்தவும், எமிரேட்ஸ் நிறுவனத்தின் சாபில் ஷேக் அகமத் பின்சயீட் அல்மக்மும் கையெழுத்திட்டுள்ளனர்.

இந்த ஒப்பந்தம் பற்றிய தகவல்கள், இதுவரையும் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. ஆனால், பொருளாதார அமைச்சரவையின் உபகுழுவின் கூட்டத்தில் இதுபற்றி இரகசியமாகப் பேசப்பட்டிருக்கிறது.

ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டவர்களும், இதனுடன் தொடர்புடையவர்களும் மட்டுமே இதுகுறித்து மிகவும் இரகசியமான முறையில் பேசியிருக்கிறார்கள்.

1998 இல், இவ்வாறான ஒரு ஒப்பந்தம் இலங்கை அரசால் கைச்சாத்திடப்பட்டபோது, இலங்கை அரசிற்கு 51 வீதமும், எமிரேட்ஸ் நிறுவனத்துக்கு 49 வீதமும் இலாபப் பகிர்வு வீதமாக ஒதுக்கிடப்பட்டன.

புதிதாகக் கைச்சாத்தான ஒப்பந்தத்தில், இலாபப் பகிர்வு வீதம் எமிரேட் நிறுவனத்திற்கு உயர்வானதாகவும், இலங்கை அரசிற்குக் குறைவானதாகவும் உள்ளது.

இத்தகவலை சட்டமா அதிபர் கே.சி.கமலசபேசன் வெளியிட்டுள்ளார். ஒப்பந்தம் முடிந்த பிறகும்கூட, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு இந்த விடயம் தொடர்பாகக் கூறப்படவில்லை எனவும் சட்டமா அதிபர் தெரிவித்தார்.

# முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகள் இந்திய தூதுவரை சந்திப்பர்!

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகள், இந்த வாரம் இந்திய உயர்ஸ்தானிகரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

இந்தச் சந்திப்பில், இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகள் - இந்திய உயர்ஸ்தானிகர் நிருபம் சென்னுடன் கலந்துரையாடவுள்ளதாகத் தெரியவருகிறது.

தமிழ்மக்கள் மற்றும் முஸ்லிம் மக்கள் - இணைந்தும், வேறாகவும் நிர்வாகத்தைப் பகிர்ந்துகொள்ளல் தொடர்பான யோசனைகளும் இந்தச் சந்திப்பில் முன்வைக்கப்படவுள்ளன.

முஸ்லிம் காங்கிரஸ் - ஏற்கனவே, அமெரிக்கா, இத்தாலி நாட்டுத் தூதுவர்களையும், பிரித்தானிய உயர்ஸ்தானிகரையும் சந்தித்து, இப்பிரச்சினை தொடர்பாகப் பேச்சு நடத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.

### துப்பாக்கியை விற்கமுற்பட்ட சிப்பாய் கைது!

(கொழும்பு)

சீனன்குடா இராணுவ முகாமிலிருந்து திருடப்பட்ட ரி-56 ரக துப்பாக்கிகளுடன், இராணுவ சிப்பாய் ஒருவர் இராணுவப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

இந்தத் துப்பாக்கிகள், கம்பஹா மாவட்டத்திலுள்ள அரசியல்வாதி ஒருவருக்கு விற்பதற்காக எடுத்துச் சென்றபோதே, இவர் கைதானார்.

# தமிழ்க்கட்சிகள், ஜே.வி.பி. ஆதரவுடன் இந்த வருட இறுதிக்குள் மாற்று அரசு!

## அனுரா பண்டாரநாயக்கா கூறுகிறார்

(கொழும்பு)

இந்த வருட இறுதிக்குள் தமிழ்க் கட்சிகளினதும், ஜே.வி.பியினதும் ஆதரவுடன், மாற்று அரசொன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக, பொதுஜன ஐக்கிய முனணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

தம்புள்ளவில் நேற்று முன்தினம் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சம்மேளன மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில்-

சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையில், தற்போது நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தை பற்றி, எதிர்க்கட்சிகள் பல்வேறு பிழையான தகவல்களை வழங்குகின்றன.

இரண்டு கட்சிகளுக்கிடையிலான கூட்டான பேச்சுக்கள், மிகவும் வலுவான முறையில் கொண்டுசெல்லப்படுகின்றன. கட்சிகளுக்கிடையில் உடன்படிக்கையொன்று விரைவில் கைச்சாத்திடப்படும்.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் போர் வலிமையை மேம்படுத்தும் வகையில், அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது எனவும், அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

# வெரித்தாஸ் வானொலியின் உறவுச் சங்கமம் நான்கு இடங்களில் நடத்துவதற்கு ஏற்பாடு

வெரித்தாஸ் வானொலியின் நேயர்கள் சந்தித்துக்கொள்ளும் 'உறவுச் சங்கமம்' நிகழ்வுகள் - எதிர்வரும் 7 ஆம், 8 ஆம், 9 ஆம், 10 ஆம் திகதிகளில் - மன்னார், கண்டி, நுவரெலியா மற்றும் கல்முனை ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது.

மணிலாவிலிருந்து வருகைதரும் வெரித்தாஸ் வானொலி தமிழ்ப் பணிக் குழுவில் - வெரித்தாஸ் வானொலியின் பொதுமேலாளர் அருட்திரு. கார்லோஸ், ஆசிய கத்தோலிக்க ஆயர் பேரவையின் சமூகத்தொடர்பு ஆணைக்குழுவின் செயலர் அருட்திரு. ஜோசப் ஜலர்ஸ், வெரித்தாஸ் வானொலியின் தமிழ்ப் பணி ஒருங்கிணைப்பாளர் அருட்திரு. அ.சிங்கராயன் மற்றும் சென்னை சாந்தோம் கலைத்தொடர்பு நிலையத்தின் உதவி இயக்குநர் அருட்திரு.டேவிற் ஆகியோரும் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

உறவுச் சங்கம நிகழ்வுகள் - ஓகஸ்ட் 7 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு - மன்னார் நகர மண்டபத்திலும், ஓகஸ்ட் 8 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு - கண்டி, பட்டன் செட்டிக நிலையத்திலும், ஓகஸ்ட் 9 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு- நுவரெலியா மேய்ப்புப்பணி நிலையத்திலும், ஓகஸ்ட் 10 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு - கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரி அரங்கிலும் நடைபெறும்.

வெரித்தாஸ் வானொலி - தன் இனிய இதயங்களை, நேருக்கு நேர் சந்திக்கும் இன்பப் பெருவிழாவான இந்த உறவுச் சங்கம நிகழ்வுகளிலே, அனைவரையும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அழைப்புவிடுத்துள்ளது.

# இடைக்கால நிர்வாகத் திட்டம்; ஜே.வி.பி. நாடளாவிய பிரசாரம்!

நாடளாவிய ரீதியிலான மக்கள் தெளிவாக்கல் பிரசாரம் ஒன்றை, ஜே.வி.பியினர் நடத்தவுள்ளனர்.

வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகம் தொடர்பாக, மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலேயே, இந்தப் பிரசாரம் அமையவுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்த மாதம் 9 ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதிவரை பத்து நாட்களுக்கு, இந்த மக்கள் தெளிவாக்கல் பிரசாரம் தொடர்ந்து இடம்பெறவுள்ளது. முக்கியமான பிரசாரக் கூட்டங்கள் - அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# முதலீடுகளை ஊக்குவிக்க ஐரோப்பிய கம்பனிகள் உதவும்!

(கொழும்பு)

இலங்கையில், மேலதிக முதலீடுகளைச் செய்வதற்கான ஊக்குவிப்புகளை, ஐரோப்பிய கம்பனிகள் வழங்குமென்று, இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் பிலிப் வெட்பேர்ன் தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பையேற்று, ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றப் பேச்சாளருமான பிலிப் வெட்பேர்ன் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

முதலீடுகள் குறித்துக் கருத்துத் தெரிவித்த பிலிப் வெட்பேர்ன் -

எந்தவொரு முதலீட்டாளரும் இன்றைய காலகட்டத்தில் இலங்கையில் முதலீடு செய்வதற்கு அஞ்சத் தேவையில்லை என்று குறிப்பிட்டார்.

சமாதானம் நிலவும் இலங்கையில், மேலதிக முதலீடுகள் மேற்கொள்ளப்படவேண்டுமென்றும் அவர் ஆர்வம் காட்டியுள்ளார்.

பிரித்தானிய முதலீட்டாளர்களுக்கு இந்த விடயம் குறித்துத் தெளிவுபடுத்தப்படும் என்றும், அவர் மேலும் தெரிவித்தார்.

# சமாதானத்தின் விரோதிகள் யார் என்பதை சர்வதேசம் இனங்கண்டுகொண்டுள்ளது!

## நினைவுத்தூபி திறப்புவிழாவில் தங்கன் உரை



சர்வதேச சமூகம் சமாதானத்தின்பால் எம்மை எதிர்பார்த்து நிற்கிறது. இன்று சமாதானத்தின் விரோதிகள் யார் என்பதை, இனங்கண்டிருக்கின்றது. இவ்வாறு, தமிழீழ அரசியற்துறைத் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவித்தார்.

1992 ஆம் ஆண்டு விமானப் படையினரின் - கொடூர விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட ஒன்பது பொதுமக்கள் நினைவாகக் கடந்த திங்கட்கிழமை, கிளிநொச்சி - உருத்திரபுரத்தில் அமைக் கப்பட்ட நினைவுத்தூபி திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில் -

இந்தச் சமாதானம் நிலைக்க வேண்டுமானாலும், எதிரி எம்மீது போரைத் தொடுக்கவேண்டுமானாலும், நாம் பலம்மிக்க சக்தியாக - முன்பிருந்த பலத்தைவிடக் கூடிய பலம்மிக்க சக்திகளாக இருந்தால்தான், நாங்கள் எதையும் சாதித்துவிடமுடியும் என்பதை நினைவில் கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம்.

இலங்கையின் சுதந்திர தினத்தன்று - இந்த மண்ணிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற தமிழினத்தை படுகொலை செய்த நாளான அன்றைய நாளை, ஒரு பெரு நினைவுகளை எமது உள்ளத்திலே வடுக்களாகச் சுமந்த, இந்த இழப்புக்களை நினைவுகளாகக் கொண்ட இன்று- உங்களின், எங்கள் தேச உறவுகளின் நினைவுகளைச் சுமந்து, எல்லோரும் ஒன்றிணைந்து - இந் நினைவுத்தூபியை அமைத்திருக்கின்றோம்.

தமிழினத்தின் விடுதலைக்காக, இந்தத் தேசத்திலே 17,650 மாவீரர்களையும், 60,000 இற்கும் மேற்பட்ட எங்கள் தேச உறவுகளையும் - நாங்கள் இழந்திருக்கின்றோம். இந்த உறவுகள் - இந்தத் தேசத்தின் விடுதலைக்காகத் தம்மை இந்த மண்ணுக்கு உரமாக்கிக் கொண்டவர்கள்.

இந்த மண்ணிலே, இவர்களுடைய செங்குருதிகள் ஆறாக ஓடியிருக்கின்றது. அதுமட்டுமல்ல, தேசத்திலும் ஆழமாகப் பதிந்திருக்கின்றது. ஓடுகின்ற இந்த நீரில்கூட, வீரர்களின் வரலாறு இருக்கின்றது. எங்கள் தேசம் - எங்கள் தேச வரலாறுகளை உச்சரித்துக் கொண்டிருக்கிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 1992 ஆம் ஆண்டு சுதந்திர தினத்தன்று, படுகொலை செய்யப்பட்ட அப்பாவி இளைஞர்களின், அப்பாவி மக்களின் நினைவுத்தூபியைத் தாங்கி நிற்கின்றோம்.

இந்தத் தேசத்தின் வித்துக்களில் ஒன்றாகவே இந்த எண்ணிக் கொள்வோம். எதிரியின் கொடூரத்தை -

இருபது ஆண்டுகளுக்கு மேலாக, இந்த யுத்தம் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. எங்கள் தலைவருடைய தலைமையிலே, இந்த மக்கள் எப்படியான அர்ப்பணிப்புகளை, இந்தத் தேசத்திற்காகச் செய்திருக்கின்றார்கள். எத்தனை வரலாறுகளைப் படைத்திருக்கின்றார்கள். அழிந்துவிடாத பெரும் வரலாறுகளைப் படைத்த மக்களாகவே, இந்தத் தேசம் வளர்ந்து கொண்டிருக்கின்றது.

மக்கள்தான் - புலிகள், புலிகள்தான் - மக்கள் என்கின்ற ஒரு பெரும் நிலையோடு, நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அன்று பெரு வெற்றிகளை ஈட்டப் பெரும் படையாக இருந்தீர்கள். தேசியத் தலைவரின் - தலைமையில்தான், நீங்கள் படைகளாக இருந்தமையினால்தான், எதிரி பலம் இழந்துபோகும்நிலை ஏற்பட்டது.

சமாதானத்தின்மூலம், எமது இனத்தின் விடுதலை - விரைவாகக் கிடைக்கவேண்டும் என்றே நாங்கள் ஆழமாகச் சிந்திக்கின்றோம். இல்லையேல், எதிரி எம்மைச் சீண்டித்தான், இந்தச் சமாதானத்தின்பால் வெற்றி பெறவேண்டுமானால், நிலையாக விருந்து இந்த உலகத்திற்கு நாங்கள் ஒரு பலம்மிக்க சக்தி என்பதை எடுத்துக்காட்டுவோம்.

எனவே, இந்த வரலாற்று உண்மைகளையும், இந்தப் பலத்தையும் நிலைத்து நிற்கின்ற ஒரு நிகழ்வாகவே இதனைக் காண்கின்றோம்.

எனவே, இவர்களின் நினைவான நிகழ்வுகள்கூட, எந்தப் பலத்தையும் எதிர்த்து நிற்கின்ற ஒரு நிகழ்வாகவே நிற்கின்றது. எதிரி பாரிய யுத்தத்தைத் தொடுத்த காலப்பகுதியில், ஒரு கொடூரத்தை எடுத்துக்காட்டுகின்ற நினைவுத்தூபியாக இது அமைந்துள்ளது எனக் குறிப்பிட்டார். (122)



உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு, வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேசசபையில் நடைபெற்ற கலைநிகழ்வுகளில் கலந்துகொண்ட சாவகச்சேரி நகராட்சிமன்ற செயலாளர் சரவணபவா மங்கவிளக்கு ஏற்றுவதையும், வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேசசபைச் செயலாளர் பசுபதி, கரவெட்டிப் பிரதேசசபைச் செயலாளர் வீரபத்திரபிள்ளை, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரீ.வி.கிருஷ்ணசாமி ஆகியோரையும் படத்தில் காணலாம்.

# படையினர் பயிர்செய்ய அனுமதித்த விளைநில உரிமையாளர் கூட்டம்

தென்மராட்சி தெற்கு, தனங்கிளப்பு, மறவன்புலோ, நாவற்குழி வடக்கு, கைதடி ஆகிய பகுதிகளில் இராணுவத்தினரால் பயிர்செய்ய அனுமதிக்கப்பட்ட ஆயிரம் ஏக்கர் நெல் வயல்களின், உரிமையாளர்களுக்கான கூட்டமொன்று - நாளை மறுதினம் வியாழக்கிழமை கைதடி கமநல அதிகாரி எஸ்.தவராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

கைதடிப் பகுதியில் 5 ஆயிரம் ஏக்கர் நெல்வயல்களிலும், 3 ஆயிரம் ஏக்கர் தென்னை, பனந்தோப்புக்களிலும் பயிர்ச்செய்கை மேற்கொள்ள உதவும்படி, இப்பகுதி மக்களால் - ஜனாதிபதி, பிரதமர் மற்றும் வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

இம்மகஜர் கையளிப்பைத் தொடர்ந்தே - இராணுவத்தினர் இப்பகுதியிலிருந்து ஆயிரம் ஏக்கர் நெல்வயல்களை விடுவிப்பதாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி கலந்துரையாடலில் கமநல ஆணையாளர், பிரதேச செயலர், இராணுவ அதிகாரிகள் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

### கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிப்பு

வட்டுக்கோட்டை பொதுசுகாதார பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட இடங்களில், கட்டாக்காலிகளாக அலைந்து திரியும் நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப் படவுள்ளன.

இதன்படி நாளை காலை 8 மணிமுதல் பி.ப 4 மணிவரை வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும், அதன் சுற்றாடலிலும், மறுநாள் வியாழக்கிழமை சங்கரத்தை சந்தை மற்றும் அதன் சுற்றாடலில் திரியும் நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப்படவுள்ளதாக, அப்பகுதிப் பொது சுகாதார பரிசோதகர் அறிவித்துள்ளார்.

## சின்னஞ்சிறு செய்திகள்

### வீதிப் பெயர்ப் பலகைகள் விஷமிகளால் அகற்றப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - சுண்டுக்குளிப் பகுதிகளில் வீதி அதிகாரசபையினால், தனியார் நிறுவனம் ஒன்றின் அனுசரணையுடன் அமைக்கப்பட்டிருந்த, வீதிப் பெயர்ப்பலகைகள் விஷமிகளால் கடந்த இரண்டு தினங்களில் அகற்றப்பட்டுள்ளன.

சுண்டுக்குளிப் பகுதியில் கொழும்புத்துறை வீதியில் அமைக்கப்பட்டிருந்த பழைய வீதி, பிளைச்சர் லேன், காட்டுக்கந்தோர் ஒழுங்கை, விதானையார் வீதி ஆகியவற்றின் பெயர்ப் பலகைகளே விஷமிகளால் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கையினால், இப்பகுதிகளுக்கு வருவோர் வீதிகளை இனங்காண்பதில் பல இடையூறுகளை எதிர்கொள்ளவேண்டியுள்ளது. (58)

### உள்ளூராட்சிமன்ற செயலாளர்களுக்கான பயிற்சிநெறி

உள்ளூராட்சிமன்றச் செயலாளர்களுக்கான பயிற்சிநெறியொன்று, ஹிங்குராங்கொட பிரதேசசபை மாநாட்டு மண்டபத்தில், கடந்த 25 ஆம் திகதிமுதல் தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெற்றன.

உள்ளூராட்சித் திணைக்களப் பயிற்சிப் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சிநெறியில், யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச சபைகளின செயலாளர்கள், பொலனறுவ, அநுராதபுர மாவட்டத்திலுள்ள பிரதேசசபைகளின் செயலாளர்கள், யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர், அநுராதபுரம், பொலனறுவ பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், வட மத்திய மாகாணங்களின் உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேற்படி கருத்தரங்கில் ஒழுக்காற்று நடவடிக்கை, துணை விதிகள், வரவு - செலவுத்திட்டம், பொது விடயம் சம்பந்தமாகப் பயிற்சியளிக்கப்பட்டதாகவும், பயிற்சியில் கலந்து கொண்ட வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேசசபை செயலாளர் சி.பசுபதி தெரிவித்தார். (13)

### கொலைச் சந்தேகநபர் பொலிஸாரிடம் சரணடைந்தார்

(அரியாலை)

அரியாலை பொன்னம்பலம் வீதியில், கடந்த 31 ஆம் திகதி இரவு இடம்பெற்ற கொலைச் சம்பவத்தின் சந்தேகநபரான சொக்கலிங்கம் சதீஸ்வரன், கடந்த வெள்ளிக்கிழமையன்று பொலிஸாரிடம் சரணடைந்தார் எனத் தெரியவருகிறது. (55)

### சட்டவிரோத மண்ணகழ்வால் வீதிப் போக்குவரத்து பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு வத்திராயன் மத்தியில் அமைந்திருக்கும் அரசடி வீதியின் இருமருங்கிலும் மண் அகழ்வு நடைபெறுவதால், வீதி மிகவும் மோசமான நிலையில், இடையூறாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனைத் தடுத்துநிறுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு, வத்திராயன் மக்கள் அரசியற்துறையினரிடம் கோரியுள்ளனர்.

# திருட்டுச் சம்பவங்களைத் தடுக்க அச்சுவேலியில் இரவுநேரக் காவல்

## பொலிஸாரும் உதவி புரிவர்

(நவக்கிரி)

அண்மைக்காலமாக அச்சுவேலிப் பகுதியில் அதிகரித்துவரும் திருட்டுச் சம்பவங்களைத் தடுப்பதற்கு, இரவுநேரக் காவலாளியை நியமிக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக - அச்சுவேலிப் பகுதியைச்சேர்ந்த வர்த்தகர்கள், கிராமசேவையாளர் மற்றும் பொதுமக்கள் ஆகியோரை அழைத்து, அச்சுவேலிப் பொலிஸார் கலந்துரையாடல் ஒன்றையும் நடத்தியுள்ளனர்.

அச்சுவேலி நகர மையப்பகுதியில் இரவுநேரக் காவலர்களை நியமித்து, காவல்கடமையினை மேற்கொள்ள அச்சுவேலி வர்த்தகர்கள் முன்வரவேண்டும் எனவும், இதற்குப் பொலிஸாரும் துணைபுரிவர் என்றும், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கேட்டுள்ளார்.

இதற்கு ஆதரவு தெரிவித்த அச்சுவேலி வர்த்தகர்கள், உடனடியாகவே இரவுநேரக் காவலாளியை நியமிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

# யாழ். மத்திய கல்லூரியில் கணினி பயிற்சி செயலமர்வு

பாடசாலைகளில் அமைக்கப்பட்டுள்ள கணினிப் பயிற்சி நிலையத்தினூடாக, 17 நாட்கள் தொடர்ச்சியாக நடைபெறும் கணினி வகுப்புக்களுக்குரிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கணினிப் பயிற்சிச் செயலமர்வு, யாழ். மத்திய கல்லூரியில் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சிச் செயலமர்வு, தொடர்ந்து எதிர்வரும் 23 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

கணினி பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டுள்ள யாழ். இந்து மகளிர் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி ஆகியவற்றிலிருந்து தலா ஆறு ஆசிரியர்களும், அடுத்த வருடம் மேற்படி பயிற்சி நிலையம் அமைக்கப்படவுள்ள கனகரத் தினம் மத்திய மகாவித்தியாலயம், திருக்குடும்பக் கன்னியர்மடம் மகா விததியாலயம், யாழ். இந்துக்கல்லூரி என்பவற்றிலிருந்து தலா மூன்று ஆசிரி யர்கள் வீதமும், மொத்தம் 21 ஆசிரியர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.


வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

ஐந்தாவது அகவையில்



பெயர் : கு.ஜெனுஜா
முகவரி: 34, கல்லூரி வீதி, நீராவியடி.

ஐந்தாவது அகவையில்



பெயர் : ம.டிலெக்ஷன்
முகவரி: 'ஆலடி' உடுவில், மனிப்பாய்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:

முகவரி

பிறந்த ஆண்டு:

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

கேடும் பெருக்கமும் இல்அல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க்கு அணி.

திருக்குறள்.

# நமது நோக்கு

## தொடரும் அச்சுறுத்தல்!

இலங்கையில் பத்திரிகையாளர்கள் அச்சுறுத்தப்படுவதென்பது - சாதாரணமான விடயமாகிவிட்டது.

அதுவும் நாட்டின் தென்பகுதியிலுள்ள பத்திரிகையாளர்கள் எதிர்நோக்குகின்ற சிக்கல்கள், நெருக்கடிகளைவிட, வடக்கு - கிழக்கில் வாழும் பத்திரிகையாளர்கள் எதிர்நோக்கும் ஆபத்துக்களும், அச்சுறுத்தல்களுமே அதிகமானவை.

இந்த அச்சுறுத்தல்கள் இன்று நேற்று ஏற்பட்டவையல்ல. றிச்சட் டீ சொய்சா முதல் நிமலராஜன் வரையாக பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்ட சம்பவங்கள் பல இலங்கையில் நடந்தேறியுள்ளன.

இவ்வாறு பத்திரிகையாளர்கள் கொல்லப்படுகின்றபோதெல்லாம் பரவலான எதிர்ப்புணர்வுகள், கண்டனக்கணைகள் கிளம்புவதும் - சம்பந்தப்பட்ட தரப்புக்கள் மீது விமர்சனங்கள் முன்வைக்கப்படுவதும் வழக்கமானவை.

சில நாட்களில் இந்த நிலை மாறிவிடும். கொல்லப்பட்ட பத்திரிகையாளர்களின் நினைவு நாட்கள் மட்டுமே பின்னர் நினைவுகூரப்படும்.

பத்திரிகையாளர்கள் மீதான கொலைச் சம்பவங்களுக்கே இதுதான் ஆகக்கூடிய எதிர்ப்பு நடவடிக்கை என்றால் - அவர்கள் மீதான மிரட்டல்கள், அச்சுறுத்தல்கள் பற்றிக் கேட்கவா வேண்டும்.

பத்திரிகையாளர்களை அச்சுறுத்தும் அரசியல்வாதிகள், படைத்தரப்பு, பொலிஸார் மற்றும் பாதாள உலகக் கும்பல்கள் என்று வரிசைப்படுத்திக் கொண்டே போகலாம்.

பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதல்கள் குறித்து, எந்தக் கரிசனையும் கொள்ளப்படாத நிலையில், மரண அச்சுறுத்தல் விடுக்கப்படுவது தொடர்பாக - சம்பந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்தப் போகின்றார்களா என்ற நிலை, ஏற்பட்டுவிட்டது.

சமீப காலங்களில் - நெல்லியடி, பருத்தித்துறை, மானிப்பாய் பகுதிகளில் பொதுமக்களின் ஆர்ப்பாட்டங்களின்போது, பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டது தொடர்பாக அரசு என்ன நடவடிக்கை எடுத்தது?

ஓய்வுபெற்ற நீதியரசர் ஒலிவர் ரணசிங்க தலைமையிலான ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டிருந்தது. ஆனால், இந்த ஆணைக்குழுவின் சிபார்சுகள் இன்னமும் வெளியிடப்பட்டதாகவோ, அவ்வாறான சிபார்சு குறித்து, நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவோ தெரியவில்லை.

இந்தநிலையில் - தான் மீண்டும் ஒரு அச்சுறுத்தல் சம்பவம் பற்றிப் பரபரப்பான செய்திகள் வெளியாகியுள்ளன. மீன்பிடி அமைச்சர் மகிந்த விஜேசேகர, 'சண்டே லீடர்' பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவுக்கு மரண அச்சுறுத்தல் விடுத்ததான சம்பவமே இதுவாகும்.

அமைச்சரின் ஊழல் நடவடிக்கைகள் குறித்து, பத்திரிகையில் வெளியிடப்பட்ட கட்டுரை ஒன்றின் தொடர்ச்சியாகவே, அவர் அமைச்சரால் மிரட்டப்பட்டிருக்கிறார்.

இத்தகைய மிரட்டல் தொடர்பாக அரசாங்கம் எத்தகைய நடவடிக்கைகள் எடுத்தது என்றால் எதுவுமே இல்லை. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவோ அவரது அரசாங்கமோ - ஊடகச் சுதந்திரம் பற்றி பெருமைப்பட்டுக் கொண்டாலும், அவரது அமைச்சரவையிலுள்ள அமைச்சர், கொலை மிரட்டலுக்கு ஒரு பத்திரிகையாளர் உள்ளாகியிருக்கிறார்.

இத்தகைய கொலை மிரட்டல் விடுத்த அமைச்சர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு, பாரிஸை தலைமையகமாகக் கொண்ட எல்லைகளற்ற பத்திரிகையாளர் அமைப்பு வற்புறுத்தியுள்ளது.

இத்தகைய சர்வதேச வற்புறுத்தலினூடாக, பத்திரிகையாளர்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கபடுகின்றதோ இல்லையோ - இந்த மாதிரியான அச்சுறுத்தல்கள் அதிகரிக்கின்றன. ஆனால், அரசாங்கம் இதையெல்லாம் கவனத்தில் கொண்டதாகவே தெரியவில்லை.

பத்திரிகையாளர்களின் சுதந்திரமான கருத்துரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டால் மாத்திரமே, ஆரோக்கியமான கருத்துச் சுதந்திரமுள்ள சமூகத்தை ஏற்படுத்த முடியும்.

இந்தவகையில், இந்த ஆரோக்கியமான கருத்துச் சுதந்திரமுள்ள சூழலை உருவாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திடம் நிறையவேயுள்ளது. அத்துடன், இந்த நிலையை ஏற்படுத்த - அரசு மீதான அழுத்தங்கள் மக்கள் மத்தியிலிருந்தும் தோற்றம் பெறவேண்டும்.

# நாட்டின் தேசிய பாதுகாப்பு பேரம் பேசப்பட்டு வருகிறது!

## பொ.ஐ.மு. நாடாளுமன்ற உறுப்பினர் கதிர்காமர் கூறுகிறார்



(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வு குறித்து, அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஒரு பொது இணக்கம் ஏற்பட்ட பின்னர், இடைக்கால நிர்வாகசபை வழங்கப்பட்டால், அதனைத் தமது கட்சி எதிர்க்காது என்று, பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சந்திரிகாவின் ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

சுதந்திரக்கட்சியின் சட்டத்தரணிகளால் ஒழுங்கு செய்யப்பட்ட, "சமாதான முயற்சிகளும் இடைக்கால நிர்வாக சபையும்" எனும் தலைப்பில், கடந்த வெள்ளியன்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் - தன்னிச்சையான யுத்தநிறுத்தப் பிரகடனத்தைவிட, புரிந்துணர்வு யுத்தநிறுத்தம் வரவேற்கத்தக்கது. அதை யாரும் எதிர்க்க முடியாது.

2000 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி பொ.ஐ.முன்னணி நாடாளுமன்றத்திற்குச் சமர்ப்பித்த அரசியல் யோசனைகள் அடங்கிய ஆவணத்தை, ஐ.தே.க. எம்.பிக்கள் நாடாளுமன்றத்திற்குள் வைத்தே எரித்தனர்.

ஆனால், இன்று அரசு - புலிகளுக்கு இடையிலான பேச்சுவார்த்தைக்கு அதனை ஓர் அடிப்படை ஆவணமாகக் கொள்ளலாம் எனவும் கூறுகின்றனர்.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னரும் தமது ஆயுதபலம், படைப்பலத்தை புலிகள் விஸ்தரித்து வருகின்றனர். நாட்டின் தேசிய பாதுகாப்பு பேரம் பேசப்படுகிறது.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுத் தேர்தல் நடத்தப்பட்டால், அதில் நாம் வெற்றிபெறவும் வேண்டும். புலிகள் இயக்கம் இனப்பிரச்சினைக்கான இறுதி முடிவில் அல்ல - இடைக்கால நிர்வாக சபையிலேயே கூடிய அக்கறை கொண்டுள்ளனர். அவர்கள் தொடர்ந்தும் தம்மைப் பலப்படுத்தி வருகின்றனர். முழுமையான ஆலோசனை இல்லாமல் புரிந்துணர்வு உடன்படிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. அதில் சமபலம் காணப்படவில்லை.

புலிகளின் தாயகக் கோட்பாட்டை, 1987 ஆம் ஆண்டே இந்தியா நிராகரித்துவிட்டது. ஆனால், புலிகள் இப்பொழுது மீண்டும் வடக்கு - கிழக்கு தாயகக் கோட்பாட்டை வலியுறுத்தி வருகின்றனர். ஆனால், தனிநாட்டை இந்தியா ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை.

பொ.ஐ.முன்னணி ஒருபோதும் சமாதான நடவடிக்கைகளுக்கு எதிராக இருக்கப்போதில்லை எனப் பிரதமருக்கு கடித மூலம் அறிவித்துள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

## வெலிக்கடைச் சிறையில் இரு செல்போன்கள் மீட்பு!

வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகளிடமிருந்து, இரண்டு கையடக்கத் தொலைபேசிகளை சிறைச்சாலை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

மூன்று தினங்களுக்கு முன்னர் சிறைச்சாலை உத்தியோகத்தர் ஒருவரினால், ஒரு கையடக்கத் தொலைபேசியும், போதைவஸ்தும், சிறைச்சாலைக்குள் கொண்டுசெல்லும்போது, கண்டுபிடிக்கப்பட்டதாக சிறைச்சாலை ஆணையாளர் தெரிவித்தார்.

சிறைச்சாலைக்குக் கொண்டுசெல்லத் தடைவிதிக்கப்பட்ட பொருட்களைக் கடத்துவதற்கு, சிறைச்சாலை அதிகாரிகள் உதவுவதாகவும், அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சிறைச்சாலை ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

# சாவகச்சேரி - சுன்னாகம் பஸ்சேவையை மீள ஆரம்பிக்குமாறு மக்கள் கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரியிலிருந்து - கனகம்புளியடி - புத்தூர் - சுன்னாகம் ஊடாக சங்கானைவரை சேவையில் ஈடுபட்டுவந்த, வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் 775 ஆம் இலக்கப் பேரூந்து சேவையை, மீள ஆரம்பிக்கும்படி பல தடவைகள் பொதுமக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டபோதும், இதுவரை இச்சேவை ஆரம்பிக்கப்படவில்லை.

சாவகச்சேரி, சுன்னாகம், சங்கானை ஆகிய மூன்று முக்கிய சந்தைகளை இணைக்கும் இச்சேவையினால், இந்த வழித்தடத்திலுள்ள விவசாயிகள் பெரிதும் பயனடைந்து வந்தனர். அத்துடன் - பாடசாலை மாணவர்கள், அரச அலுவலர்கள் போன்றோரும் இதனால் பெரும் பயனடைந்தனர்.

மட்டுவில், சரசாலைப் பகுதி மக்கள் சங்கானைக்குச் செல்வதற்கும், நுணாவில் அல்லது சாவகச்சேரி வரை, ஏறத்தாழ 3 மைல் தூரம் பயணம் செய்து, அங்கிருந்து 769 ஆம் இலக்க பேரூந்தில், யாழ்நகர் சென்றோ அல்லது 811 ஆம் இலக்கப் பேரூந்தில் சுன்னாகம் சென்றுதான் வேறு பேரூந்தின் மூலம் சங்கானையைச் சென்றடைய முடியும். இதனால், நேரமும் பணமும் வீண்விரயமாவதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

2000 ஆம் ஆண்டு மே மாதம்வரை நடைபெற்றுவந்த இச்சேவை, யுத்தம் காரணமாக இடைநிறுத்தப்பட்டது. ஏனைய பேரூந்துச் சேவைகள் மீளஆரம்பிக்கப்பட்டபோதும் 775 ஆம் இலக்கச்சேவை மட்டும் ஆரம்பிக்கப்படாதது மிகவும் கவலைக்குரியதெனவும், மீண்டும் இச்சேவையை ஆரம்பிக்குமாறு பல தடவைகள் பொதுமக்கள் கையெழுத்திட்டு வடபிராந்திய போக்குவரத்துச் சபையிடம் எழுத்து மூலமும், நேரிலும்தொடர்பு கொண்டபோதும், இதுவரை இதுபற்றிய சாதகமான முடிவெதுவும் எடுக்கப்படவில்லையெனவும் கூறப்படுகிறது.

சாரதிகள், நடத்துநர்கள் இல்லையென்றோ, போதியளவு பேரூந்துகள் இல்லையென்றோ சாட்டுப்போக்குச் சொல்லாமல், இப்பிரச்சினையை, மனிதாபிமான அடிப்படையில் அணுகி, ஒரு நல்ல தீர்வினை வடபிராந்திய போக்குவரத்துச்சபை எடுக்கவேண்டுமென மக்கள் எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ளனர்.(24)

## நீதிச்சேவை மறுசீரமைப்புக்கு நாடாளுமன்ற விசாரணைக்குழு!

நீதிச்சேவையை மறுசீரமைப்பது தொடர்பான சிபார்சுகளைச் சமர்ப்பிப்பதற்காக, விசேட நாடாளுமன்றக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த நாடாளுமன்றக்குழு - நீதிபரிபாலனம், நீதிபதிகள், நீதிமன்ற ஊழியர்கள், சட்டத்தரணிகள், பொலிசார் மற்றும் சிறைச்சாலைகள் தொடர்பான விடயங்கள் குறித்து ஆராய்ந்து சிபாரசுகளைச் சமர்ப்பிக்கவுள்ளது.

இந்த நாடாளுமன்ற குழுவின் செயலாளராக, பிரியாணி விஜயசிங்க கடமையாற்றுவார். இந்தக் குழுவிற்கு, பொதுமக்கள் - எழுத்து மூலமாகவும் வாய்மொழிமூலமாகவும் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் அறிக்கைகளைச் சமர்ப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## அம்பாறை - கொழும்பு விமானசேவை ஆரம்பம்!

அம்பாறை மாவட்டத்திற்கான உள்ளூர் விமானசேவை நேற்று முன்தினம் முதல் மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுடன் நடத்தப்பட்ட பேச்சுக்களையடுத்தே, கொழும்புக்கும் அம்பாறைக்கும் இடையிலான விமானப் போக்குவரத்துக்கள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

1995 இல் போர் தீவிரமடைந்த பின்னர், அம்பாறைக்கும் - கொழும்புக்கும் இடையிலான விமானப் போக்குவரத்துக்கள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

நேற்று முன்தினம் இந்த உள்ளூர் விமானசேவை வெள்ளோட்டம் இடம்பெற்றபோதும், எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் தினசரி விமானப் போக்குவரத்து இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## பொலித்தீன் பாவனைக்கு சிகிரியாவில் தடைவிதிப்பு!

சிகிரியாவில், பொலித்தீன் பைகளில் பாவனைக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. சிகிரியாவிற்கு வரும் உல்லாசப் பிரயாணிகள் அதிகளவில் பொலித்தீன் பைகளைப் பயன்படுத்துவதால், சுற்றாடல் மாசு ஏற்படுவதைக் கருத்திற்கொண்டே - இப்பகுதியில் பொலித்தீன் பயன்பாட்டுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

பொலித்தீன் பைகளை வீசுவோர் கண்டுபிடிக்கப்பட்டால், அந்த இடத்திலேயே ஐம்பது ரூபா தண்டப்பணம் அறவிடப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.85 | 97.31 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 150.62 | 157.80 |
| 1 யூரோ | 108.81 | 109.97 |
| 1 சுவிஸ் பிராங் | 70.62 | 71.81 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 62.74 | 63.74 |
| 1 ஜப்பானிய யென் | 00.80 | 00.81 |
| 1 சவூதி றியால் | 25.89 | 25.89 |

# நூற்றாண்டு கண்ட பாடசாலை நிரந்தரக் கட்டடமில்லா அவலம்!

வலிகாமம் பிரதேசத்தில் மயிலிட்டி என்னும் சிற்றூரில், 1873 ஆம் ஆண்டு மாசி மாதம் பெரியநாட்டு தேவன்துறை என்னும் இடத்தில் - காணிக்கை மாதா தேவாலயம் அருகில், யாழ். மயிலிட்டி றோ.க. பாடசாலை, 52 மாணவர்களுடன் ஆரம்



பமாகியது. ஆரம்பத்தில் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையே கற்பித்தல் செயற்பாடு இடம்பெற்றது. தொடர்ந்து பல முன்னேற்ற மான செயற்பாடுகளால் மாணவர்கள் தொகையும் அதிகரித்தது. இப்பாடசாலையின் வளர்ச்சிக்கும், இதன் தோற்றத்திற்கும் முக்கிய காரணமாக இருந்தவர்கள், யாழ். மறைமாவட்ட ஆயர்கள் என்றே கூறவேண்டும்.

பாடசாலையின் துரித வளர்ச்சியைக் கண்ட கல்வித் திணைக்களத்தினர் - 1954 ஆம் ஆண்டு சிரேஷ்ட பாடசாலைத் தராதர பத்திர வகுப்பு (S.S.C) ஆரம்பிக்க அனுமதி வழங்கினர். 1873 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடசாலை, 1963.04.01 இல் அரசினால் சுவீகரிக்கப்பட்டது. அப்போது 530 மாணவர்களும், 14 ஆசிரியர்களும் இருந்தனர். 1983 ஆம் ஆண்டு யாழ். ஆயர் தியோகுப்பிள்ளையின் அயராத முயற்சியினால், விஞ்ஞான ஆய்வு கூடம் ஆரம்பிக்கப்பட்டது. அப்போது க.பொ.த (சா/த) விஞ்ஞானபாடப் பரீட்சையில் காங்கேசன்துறை வட்டாரத்தில் பெரும் மாற்றத்தை உண்டு பண்ணினர்.

இந்தப் பாடசாலை - பாடசாலை சார்பான சகல செயற்பாடுகளிலும் முன்னணியில் திகழ்ந்தவேளை, இராணுவ ஆக்கிரமிப்பால் 18.06.1990 ஆம் ஆண்டு தனது சொந்த இடத்தைவிட்டு, தனது பௌதீக வளங்களை இழந்த நிலையில் இடம் பெயர்ந்து சென்றது. அன்றிலிருந்து இன்றுவரை பெரும் கஷ்டங்கள், இடையூறுகள் மத்தியில் தனது பாடவிதான செயற்பாடுகளிலும், இணைபபாடவிதானச் செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகிறது.

மயிலிட்டி றோ.க.த.வித்தியாலயம் இடப்பெயர்விலிருந்து, இன்று வரை - அதாவது கடந்த 10 வருடங்களாக, 4 இடங்களில் தனது பாடசாலையை இடம்மாற்றி இடம்மாற்றித் தொடர்ந்து, இப்போது ஆனைக்கோட்டைச் சந்தியிலுள்ள தனியாரின் இல்லத்தில் - கடந்த இரண்டரை வருடங்களாக அடிப்படை வசதிகளற்ற நிலையில் இயங்கிவருகிறது.

இந்தப் பாடசாலையானது 1990-1992 வரை பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த. வித்தியாலயத்திலும், 1992-1996 வரை மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் றோ.க.த.க. வித்தியாலயத்திலும், 1997-2000 வரை மானிப்பாய் அந்தோனியார் கோயில் வளவிலும், 2000-2001 வரை மானிப்பாயில் தனியார் இல்லம் ஒன்றிலும், 2001-இன்றுவரை ஆனைக்கோட்டையிலும், மின்சார வசதியோ, தளபாட வசதி, விளையாட்டு மைதான வசதி, மலசலகூடம், கிணறு, ஆசிரியர் ஓய்வறை, நூலக, ஆய்வு கூட வசதிகளோ இன்றி மிகவும் அசௌகரியமான நிலையில் இயங்கிவருகிறது.



இந்தப் பாடசாலையில் கடந்த 10 வருடங்களாக செ.அன்ரன் என்பவரே அதிபராகக் கடமையாற்றி வருகிறார். இப்போது 118 மாணவர்களும், 11 ஆசிரியர்களுமே இருக்கின்றனர். இப்பாடசாலையில் - இப்போது தரம் 1 முதல் தரம் 11 வரை வகுப்புக்கள் இடம்பெறுகிறது. இந்தப் பாடசாலையில் ஓரளவு விளையாட்டு உபகரணங்கள் இருந்தபோதிலும், விளையாட்டு மைதானமின்மை பெரும் மனவருத்தத்திற்குரிய ஒன்றாகும். வலிகாமம் கல்வி வலயத்தினரின் பூரண ஒத்துழைப்பும், அடிப்படை வசதிகளின்றியும் காணப்பட்டாலும், சகிப்புத் தன்மையுள்ள ஆசிரியர்களின் தாராள ஒத்துழைப்பே, இப்பாடசாலை, தொடர்ந்தும் வலிகாமம் வலயத்தில் தங்களுக்கென ஒரு இடத்தைத் தங்கவைத்துக் கொண்டிருக்கிறது.

அண்மையில் வலிகாமம் வலய மட்ட - தரம் 6, 7 போட்டிகளில் -



**செய்திக் கட்டுரை**

7 ஆம் தர மாணவன் தே.பிரதீப் ராஜ்குமார் சமூகக்கல்வி - பொது அறிவுப் போட்டியில் 1 ஆம் இடத்தையும், அதேபிரிவில் கெரோடேராஜ் 2 ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர். தமிழ் கற்பித்தற்கென தனியான ஆசிரியர் இல்லாதபோதும், தமிழ் மொழித்திறன் போட்டியிலும் பல பெறுபேறுகளைப் பெறக்கூடியதாகவுள்ளது. இதற்கெல்லாம் காரணம்- ஆசிரியர்களின் கடின உழைப்பென்றே கூறவேண்டும்.

இவ்வாறு இடம்பெயர்ந்து செயற்படும் இப்பாடசாலைக்கு, பெற்றோரின் ஆதரவு மிகமிகக் குறைவாகவே உள்ளது. பெற்றோர் - மாணவர்களது கல்விசார் செயற்பாடுகளில் இயன்றளவு ஒத்துழைப்பு நல்குவது, இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு அவசியமாக அமையும். இப்பாடசாலைக்கு - உதவிவழங்கும் நிறுவனங்களும் உதவிவழங்குவதில்லை. ஏனென்றால், சொந்த இடத்திற்குப் போனால் போதியளவு உதவுவதாகக் கூறுகிறார்கள். எமது பாடசாலையானது அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் இருப்பதால், இவர்கள் போகமுடியாது.

இவர்கள் அங்கு போகாவிட்டால் உதவி கிடையாது. எனவே, இவ்வாறாகத் தனியார் இல்லங்களில் மாறிமாறிச் செயற்பட வேண்டிய நிலை தொடரும். இடம்பெயர்வுகள், பின்னடைவுகள் வந்தபோதிலும், இப்பாடசாலையானது - பாடவிதானச் செயற்பாடுகளிலும், இணை பாடவிதானச் செயற்பாடுகளிலும் முன்னிலையில் செயற்பட்டு வருவதைப் பாராட்டாமல் விடுவது நம் எல்லோருக்கும் நல்லதாக அமையாது.

**விஜயேந்திரன்**

---

# மிருகங்கள் மூலம் பரவும் நோய்கள்

பகுதி 7



## ஆலமரங்களில் கட்டப்படும் இளங்கொடிகள்

*(பேய்க் காய்ச்சல் தொடர்ச்சி...)*

செருப்பு அணியும் பழக்கம் விருத்தி அடையாத அக்காலத்தில், வெறுங்காலுடன் ஆலமரங்களின் கீழும் அதன் ஓரங்களிலும் நடமாடியோரது கால்களில் (முள் குற்றல் போன்ற) காயங்கள் இருக்கும் வேளைகளில் - காயங்களின் ஊடாக இந்தக் கிருமிகள் தொற்றிக் காய்ச்சலை ஏற்படுத்தின.

இந்த அவலநிலையை அவதானித்த சமூக சுகாதார நல ஆர்வலர், தசாவதானி சரவணமுத்து ஆறுமுகம், வைத்திய நிபுணர்களிடம் இந்த நோய் பற்றி விசாரித்து, உண்மை நிலையை அறிந்து, மக்களுக்கு அதனைத் தெரிவித்து, அதனைக் கட்டுப்படுத்தி உதவினார்.

### சரவணமுத்து ஆறுமுகத்தினால் இந்த நோயை ஒழிப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

1. *இந்த நோய் பேயினால் ஏற்படுத்தப்படுவதில்லை. மாறாக கிருமிகளினாலேயே ஏற்படுத்தப்படுகிறது எனப் பிரசாரம் செய்தமை.*
2. *மார்கழி மாதத்தின் கடைசித் தினத்தன்று இந்தியாவில் வேண்டாப் பொருட்களை எரித்து, கொண்டாடப்படும் 'போகிப் பண்டிகை' தினத்தை – பேய் ஒழிப்புத் தினமாக்கி, ஆலமரங்களில் தொங்கிக் கொண்டிருந்த இளங்கொடிப் பொட்டலங்களை அறுத்து எரிக்குமாறும், ஆலமரங்களின் கீழிருந்த சருகுகளுக்கும் தீமூட்டி எரிக்குமாறும் பிரசாரம் செய்தமை.*
3. *ஆலமரங்களில் இளங்கொடிகளைக் கட்டித் தொங்கவிடுவதைத் தவிர்த்து அவற்றை ஆழக் குழியில் புதைக்குமாறு ஆலோசனை கூறியமை.*
4. *செருப்பு அணியும் பழக்கத்தை ஊக்குவித்தமை.*
5. *உரிய உடை அணியாது சிறுவர்களை மண்விளையாட அனுமதிக்க வேண்டாமெனவும், ஆலமரங்களின்கீழ் விளையாட அனுமதிக்க வேண்டாமெனவும் பெற்றோரைக் கேட்டுக்கொண்டமை.*

இந்த நடவடிக்கைகளால், இந்த நோய் பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டபோதிலும் முற்றாக ஒழியவில்லை. காரணம் - நோயுற்ற பசுக்களின் பாலிலும் இந்த நோய்க்கிருமிகள் இருப்பதும், சைவ சமயிகளால் முற்காலத்தில் உடலில் தெளிக்கப்படுவதற்கு மாத்திரம் பயன்படுத்தப்பட்ட, பால் கலந்த கோயில் தீர்த்தத்தின் ஒரு பகுதியையும், கோமுகையால் வழியும் தீர்த்தத்தைப் பருகும்பழக்கம் ஏற்பட்டதாகும்.

பால்வளமுடைய ஆலமரத்தில் - இளங்கொடிகளைக் கட்டித் தொங்கவிட்டால், அவற்றை ஈன்ற பசுக்களில் பால் சுரக்கும் என்ற மூடநம்பிக்கை மீண்டும் ஏற்பட்டு, ஆலமரங்களில் இளங்கொடிகளைத் தொங்கவிடும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்படுகின்றன.

சுகாதாரத்துறை அதிகாரிகள், ஆலமரங்களில் தொங்கவிடுவதைத் தடுக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். கறவை மாடுகளுக்குச் சிபார்சு செய்யப்படும் தீனிகளை ஊட்டுவதனால், பால்சுரப்பு மிகும். கறவை மாட்டினால் கழித்து அகற்றப்படும் இளங்கொடியை ஆலமரத்தில் தொங்கவிடுவதால், சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படும். கறவை மாட்டின் பால் சுரப்பில் எவ்வித மாற்றமும் ஏற்படாது என விளங்க வைக்க வேண்டும்.

### ஜப்பான் மூளைக்காய்ச்சல் (JAPPANESE - B -ENCEPHALITIS)

இந்த நோயை ஏற்படுத்தும் வைரஸ் பன்றிகளில் காணப்படும். பன்றிகளைக் கடித்த நுளம்பு, தெள்ளு போன்றவை மனிதரைக் கடிப்பதனால், மரணத்தை ஏற்படுத்தும். நுளம்பு, தெள்ளுப் போன்றவற்றை ஒழித்து, இந்த நோய் ஏற்படாது தடுக்கலாம். உயிராபத்தை ஏற்படுத்தும் இந்த நோய் பற்றி மிகவும் எச்சரிக்கையாக இருத்தல் அவசியம்.

### பறவைக் காய்ச்சல் (BIRD FEVER)

இந்த நோய் என்ரெறோ வைரஸ் 71 (ENTEROVIRUS 71) என்னும் வைரஸினால் ஏற்படுத்தப்படும். இந்த நோய் - நோயுற்ற கோழிகளிலிருந்து மனிதருக்குத் தொற்றும். இந்த நோய் காய்ச்சலை உண்டாக்கும். இது குழந்தைகளைக் கடுமையாகத் தாக்கும். நோயுற்று இறந்த கோழிகளை மண்ணில் புதைத்தால், சாதகமற்ற சூழலைத் தாங்கி, நீண்டகாலம் வாழத்தக்க இந்த வைரஸ" மூலம் பரவும் (soil born disease) ஆக பிற்காலத்திலும் பரவும் என்பதால், இந்த நோயுற்ற கோழிகள் எரிப்பதன்மூலம் அழிக்கப்படுகின்றன.

### லெப்ரோஸ்பைறோசிஸ்

லெப்ரோல்பைறா (LEPTOSPIRA) என்னும் நுண்ணுயிரியினால் இந்த நோய் ஏற்படும். இந்த நுண்ணுயிரிகள் நாய், பூனை, எலி போன்றவற்றிற்கு ஏற்பட்டு, அவற்றின் சலத்தின் ஊடாக மனிதருக்குப் பரவும். இந்தப் பிராணிகளின் சலம் மழைகாலத்தில் தேங்கும் நீரிலும், நீர் நிலைகளிலும் கலக்கும்போது, அந்த நீரில் கலக்கும் இநத நுண்ணுயிரிகள் கால்களிலுள்ள புண்களின் ஊடாக மனிதரின் உடலினுள் பிரவேசிக்கும். சிறு பிள்ளைகள் இந்த நுண்ணுயிரியைக் கொண்ட மண்ணிலிருந்து விளையாடும்போது, ஜனன உறுப்புகளின் மென்மையான பகுதிகளினூடாகவும் நுழையும். சிறுநீரகத்தைச் சேதப்படுத்தும். காய்ச்சல், உடல் உழைவு, உடல் நோவு, வாந்தி என்பன இந்த நோயின் குணங்குறிகளாகக் காணப்படும். நாய்களிலேயே இந்த நுண்ணுயிரி அதிகம் காணப்படுவதால், டீ.எச்.எல். (D.H.L.) எனப்படும் தடுப்பூசியை, நாய்களுக்கு உரிய கால இடைவெளிகளில், நாயின் வாழ்நாள் முழுவதும் ஏற்றுவித்து, இந்த நோய் வராது தடுக்கலாம்.

*(தொடரும்.....)*

ச.ஆ.கோபாலமூர்த்தி

---

# மருதங்கேணியில் மீளக்குடியமர்ந்தோருக்கு கொடுப்பனவுகள் வழங்க நடவடிக்கை!

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில், மீளக்குடியமர்ந்தவர்களுள் முதற்கட்டமாக 15 ஆயிரம் ரூபா வழங்கப்பட்ட பயனாளிகளுக்கு, மிகுதி 10 ஆயிரம் ரூபாவையும் வழங்குவதற்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனை நடவடிக்கை எடுத்துள்ளது.

இது சம்பந்தமாக யாழ். செயலகத்தினால், பயனாளிகளின் பெயர்ப் பட்டியலை எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. கிராம அலுவலர்கள் பட்டியல் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

## முன்பள்ளி மாணவர்களுக்கு சத்துணவு

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைகுட்பட்ட, 19 முன்பள்ளி மாணவர்களுக்கு சத்துணவு மா (திரிபோஷா) வழங்கப்பட்டது.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் - அப்பகுதி முன்பள்ளிகளுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை சத்துணவு மா வழங்கப்பட்டது. (122)

# முல்லைத்தீவில் இலங்கை வங்கிக்கிளை

(முல்லைத்தீவு)

பதின்மூன்று வருடங்களின் பின்னர் - கடந்த வெள்ளிக்கிழமை முதல் முல்லைத்தீவின் நகரப் பகுதியில், இலங்கை வங்கிக் கிளை இயங்கி வருகின்றது.

1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கையால், முல்லைத்தீவில் இலங்கை வங்கியின் செயற்பாடுகள் நடைபெறாதிருந்தது.

இதுவரை காலமும் புதுக்குடியிருப்பில் இலங்கை வங்கியின் செயற்பாடுகள் யாவும் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. (122)

# உளவாளியின் ஒன்பது வயது மகள் காஷ்மீரில் அடித்துக் கொலை!




காஷ்மீர் தீவிரவாதிகள் - உளவாளி எனச் சந்தேகித்த ஒருவரின், ஒன்பது வயது மகளை அடித்துக் கொலைசெய்திருப்பதாக, காஷ்மீர் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சிறுமியின், பன்னிரண்டு வயது நிரம்பிய சகோதரி இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்துள்ளார். தீவிரவாதிகள் - நிஷார் உஷேன் என்கிற நபரையே தேடிச் சென்றதாகவும், தீவிரவாதிகளைக் கண்ட அவர் தப்பிச் செல்லவே, மகள்மார் இருவரும் தாக்குதலுக்கு உள்ளானதாகவும் தெரியவருகிறது.

அண்மைக்காலமாக காஷ்மீர் தீவிரவாதிகள் - பெண்கள் மற்றும் சிறுமிகள் மீது தாக்குதல்களை அதிகரித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தமக்கு எதிராகச் செயற்படுவதாக நம்பப்படும் நபர்களின் உறவினர்களே, தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு உள்ளாவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே டோடா மாவட்டத்தில் மதக்கலவரம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.



ஈராக்கில் - காலிதியா என்ற இடத்தில் பதுங்கியுள்ள அமெரிக்க இராணுவத்தினர்

# லைபீரியத் தலைநகருக்கு 30 சமாதானப் படையினர்!

## நைஜீரியா அனுப்பியது

30 நைஜீரிய சமாதானப் படையினர், லைபீரியத் தலைநகரான மொன ரோவியாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபைக்குச் சொந்தமான, இரண்டு ஹெலிகொப்ரர்களில் - பலத்த மழைக்கு மத்தியில் இவர்கள் தமது பயணத்தை மேற்கொண்டனர்.

இவர்களைத் தொடர்ந்து மேலும் பல நைஜீரியச் சமாதானப் படையினர், லைபீரியாவுக்குச் செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சமாதானப் படையினர் வந்ததும், தாம் அங்கிருந்து விலகிக்கொள்வ



தாக, பிரதான கிளர்ச்சித் தலைவரான சேகு கொனே தெரிவித்துள்ளார்.

லைபீரிய ஜனாதிபதி சாள்ஸ் ரெயிலர் எதிர்வரும் 11 ஆம் திகதி பதவியில் இருந்து விலகி, நைஜீரியா செல்லவுள்ளார்.


உலகவலம்

## கைதிகளை இஸ்ரேல் விடுவிப்பு

பலஸ்தீனியப் பிரதமர் முகமட் அப்பாஸின் நம்பிக்கையைப் பெறும் பொருட்டு, 349 பலஸ்தீனக் கைதிகளை விடுவிப்பதாக - இஸ்ரேல் அறிவித்துள்ளது.

இதில் 183 பேர் தீவிரவாதிகளுக்கு ஆதரவு அளித்தவர்கள் என்றும், மேலும் 130 பேர் எவ்வித குற்றச்சாட்டுக்கள் இன்றியும், இஸ்ரேலால் கைது செய்யப்பட்டவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் 100 பேர் விடுவிக்கப்படவுள்ளனர் என்று, இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோன் தெரிவித்துள்ளார்.



ஈராக்கில் - காலிதியா பொலிஸ் நிலையம் மக்களால் தீயிடப்படுகிறது.

# சதாமின் பிள்ளைகள் நினைவாக நடைபெறவிருந்த பிரார்த்தனை ரத்து!



(பக்தாத்)

ஈராக்கின் முன்னாள் ஆட்சியாளர் சதாம் ஹுசைனின் பிள்ளைகளான உதய், குசே ஆகியோரின் ஞாபகார்த்தப் பிரார்த்தனை, இறுதி நேரத்தில் ரத்துச்செய்யப்பட்டுள்ளதாக, உள்ளூர் முஸ்லிம் தலைவர் ஒருவர் தெரிவித்தார்.

இவர்களுடைய சடலம் - அமெரிக்கப்படையினரின் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் கடந்த சனிக்கிழமை நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த நிகழ்வின்போது - ஈராக்கில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறக்கூடுமென்று அமெரிக்கப்படைகள் எதிர்பார்த்த போதும், அவ்வாறு எதுவும் இடம்பெறாதது, அமெரிக்கப் படையினருக்குப் பெரும் நிம்மதியான விடயமாக இருந்தது.

இந்த நல்லடக்கத்தின்போது - சதாமின் உறவினர்கள் சிலரும் பங்குபற்றினர் என்று தெரிவிக்கப்படுகிறது.



தென்கொரியாவின் போகொள் என்ற இடத்தில் தரையிறக்கப்படும் அமெரிக்க இராணுவம்.

## அணுவாயுத பரிசோதனை பற்றி ஆராய

# ஐ.நா சட்டவல்லுநர்கள் ஈரானுக்குச் சென்றனர்!

ஐக்கிய நாடுகள் சபையின் சட்டவல்லுநர்கள் குழுவொன்று ஈரான் சென்றுள்ளது.

இவர்கள், தெஹ்ரானில் மேற்கொள்ளப்படவிருக்கும் அணுவாயுதப் பரிசோதனைகள் பற்றி ஆராய்வார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள், அணுவாயுத விவகாரத்தில் - ஈரான் கையெழுத்திட வேண்டுமென்றும் கோரவுள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியம், ரஷ்யா, அமெரிக்கா போன்ற நாடுகளின் அழுத்தங்களின் பேரிலேயே, ஈரான் ஐக்கியநாடுகள் சபையின் சட்டவல்லுநர்களை தமது நாட்டுக்குள் அனுமதித்துள்ளது.

இந்தப் பரிசோதனைகளுக்கு ஈரான் இணங்காவிட்டால், தமது ஒத்துழைப்புக்களை விலக்க நேரிடும் என்று - ஐரோப்பிய ஒன்றியம், ரஷ்யா, அமெரிக்கா ஆகிய நாடுகள் எச்சரிக்கை செய்துள்ளது.




தில்லையம்பதி மோட்டோர்ஸ்

விவசாய நீர் இறைக்கும் இயந்திரம், மின்சார நீர் இறைக்கும் இயந்திரம் மற்றும் உதிரிப்பாகங்கள் விற்பனையாளர்கள்.

மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

இல. 236 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021-2222488, 021-2223820

(சி-1316)

மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

அநேக வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க இம்மாதம் 15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. உங்களுக்குத் தேவையான சகலவிதமான புத்தகங்களும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள "புத்தகக் கடல்" 10% - 50% கழிவு வழங்கப்படும். ஒரு சில மருத்துவ, பொறியியல், கணினிப் புத்தகங்கள், ஆங்கிலம் கற்றுக்கொள்ளப் பாடசாலை மாணவர்களுக்கான ஒரு சில புத்தகங்களும், உபகரணங்களும் ரூபா 10 - ரூ 100 வரை பெற்றுக்கொள்ளலாம். இவை தவிர பாடசாலை அலுவலக உபகரணங்களும், பாடசாலை அழிபொருட்கள், மூலப்பொருட்களும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலைகளுக்கு இலவச விநியோகம். பணத்திற்குப் பதிலாக வங்கிக் கடன் அட்டைகளும் பெற்றுக்கொள்ளப்படும்.

உங்கள் தேவை எதுவானாலும் பூர்த்திசெய்யத் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
இல. 212 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# இடைக்கால நிர்வாக திட்டம் குறித்து மிலிந்த படையினருக்கு விளக்கம்!



(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு எட்டப்படும் வரை, வடக்கு - கிழக்கில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்காகவே, இடைக்கால நிர்வாகசபையை உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாக - பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டாலும், அரசாங்கம், படையைப் பலப்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். வவுனியாவிற்கு கடந்த வெள்ளியன்று விஜயம் செய்த அமைச்சர் மிலிந்த, படை யினரைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே, இந்தக் கருத்துக்களை முன்வைத்தார்.

ஓமந்தை முன்னரங்கக் காவலரண்களில் கடமை புரியும் இராணுவத்தினர் எதிர்நோக்கும் சிரமங்களையும், இந்த விஜயத்தின்போது அமைச்சர் ஆராய்ந்தார்.

சமாதான நடவடிக்கைகள் குறித்து, இரு இனத்தவர்களும் இன்னும் தெளிவுபடுத்தப்படவேண்டும். நாம் விடுமுறைக்கு வீடுகளுக்கு செல்லும்போது, எமது பெற்றோர்கள் மீண்டும் யுத்தம் தொடங்கிவிடுமா என்று கேள்வி எழுப்புகின்றனர் என, அங்கு கடமையிலிருந்த இராணுவத்தினர் கேள்வியெழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் மொறகொட - தற்போதைய நிலையில், தாம் பேச்சுவார்த்தைகளில் இருந்து புலிகள் விலகிக்கொள்வதாக அறிவித்தனர்.

அபிவிருத்தி நடவடிக்கைகள் சரியான முறையில் மேற்கொள்ளப்படவில்லையென அவர்கள் தெரிவித்தனர். அதனால், இதற்குத் தேவையான யோசனைகளை, அரசாங்கம் - நோர்வே அரசு ஊடாக விடுதலைப் புலிகளுக்கு சமர்ப்பித்துள்ளது.

இடைக்கால நிர்வாகசபை தொடர்பான யோசனைகளே இவை. இதில் இராணுவம், பொலிஸ் அதிகாரங்கள் ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளன. தற்போதைய பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தும் நீடிக்கும். இந்த முறையின கீழ் எவ்வித மாற்றங்களும் மேற்கொள்ளப்படமாட்டாது.

அபிவிருத்தி, பொருளாதாரக் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்லும் நோக்கிலேயே, இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஏற்படுத்தப்படுகின்றது. நடைமுறையில் இந்த இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு, மாகாண சபைகளைப் போல் உருவாக்கப்படவில்லை.

அதனால்தான், இந்த நிலைமையை மாற்றத் தற்போது நடவடிக்கை எடுத்துவருகின்றோம் என்றும் அவர் கூறினார். படையினர் எதிர்நோக்கும் சிக்கல்களைத் தீர்க்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# மேல்மாடியிலிருந்து வீழ்ந்த குடும்பஸ்தர் உயிரிழந்தார்!

## யாழ்.நகரில் நேற்றிரவு சம்பவம்

யாழ்.நகரிலுள்ள நகைக்கடை ஒன்றின் மேல் மாடியிலிருந்து வீழ்ந்து குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்தார்.

நேற்று முன்னிரவு - யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் இந்தச் சம்ப வம் இடம்பெறறது.

மட்டக்களப்பு - பெரிய போரைதீவைச் சேர்ந்த சின்னத்தம்பி தம்பாப்பிள்ளை என்பவரே மரணமடைந்தவராவார். இவரது சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மது போதையிலிருந்த இவர் - உணவருந்திவிட்டு, சிறுநீர் கழித்துவிட்டு வருவதாகக் கூறிச் சென்றவர், சிறிது நேரத்தில் சடலமாக மீட்கப்பட்டதாகவும் தெரியவருகிறது. (111,121)

# மருதனார்மடம் விபத்தில் நேற்றிரவு இருவர் காயம்!

தெல்லிப்பளையிலிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு ஆபத்தான நிலையில் இருந்த, நோயாளி ஒருவரைக் கொண்டு சென்று கொண்டிருந்த அம்புலன்ஸ் வண்டியும், உடுவிலிருந்து உரும்பிராய் நோக்கிச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் - நேற்றிரவு 9 மணியளவில், மருதனார்மடம் சந்தியில் மோதுண்டதால், மோட்டார் சைக்கிளில் சென்றவர் படுகாயமடைந்தார். அம்புலன்ஸ் வண்டியும் சேதமடைந்தது.

அதேவேளை - இதே மோட்டார் சைக்கிள் மோதியதால் சைக்கிளில் சென்று கொண்டிருந்த, கந்தர்மடத்தைச் சேர்ந்த க.திருகரன் என்பவரும் காயமடைந்தார்.

காயமடைந்தவர்களை ஏற்றிக் கொண்டு அம்புலன்ஸ் வண்டி யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சென்றது. (68)

# இலவச மருத்துவமுகாம்!

நெடுந்தீவு தியாகதீபம் திலீபன் மருத்துவமனையின் முதலாம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு, இலவச மருத்துவமுகாம் ஒன்று நேற்று நடைபெற்றது.

நெடுந்தீவு திலீபன் மருத்துவமனையில் நடைபெற்ற இம்மருத்துவ முகாமிற்கு, நெடுந்தீவு தேசிய எழுச்சிப்பேரவையின் செயலாளர் சு.கணேசலிங்கம் தலைமை வகித்தார்.

தமிழீழ தேசியக்கொடியை தமிழீழ சுகாதார சேவை துணைப்பொறுப்பாளர் ஆ.தமிழ்வாணனும், பொதுச்சுடரை நெடுந்தீவு அரசியற்துறைப் பொறுப்பாளர் கண்ணனும், நினைவுச் சுடரினை வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை அதிகாரி க.மயிலேறும்பெருமாளும் ஏற்றிவைத்தனர்.

மருத்துவமுகாமைத் தொடர்ந்து- முதலாம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி நடாத்தப்பட்ட போட்டிகளுக்குரிய பரிசில்களும் வழங்கப்பட்டன.

நேற்று நடைபெற்ற மருத்துவ முகாமில் பல், கண், இருதயம் தொடர்பான நோய்களுக்கு, வைத்திய ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

### அரசாங்கம்...

குறித்தும் பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ளன. ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்ட ஆவணத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்ட ஆவணத்திற்கும் பல்வேறு முரண்பாடுகள் இருப்பதாக, ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

இதன்படி, இடைக்கால நிர்வாகக கட்டமைப்பு என்ற போர்வையில், விடுதலைப் புலிகளுக்கு வடக்கு-கிழக்கை ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என, சங்கப் பேரவைத் தலைவர் கூறினார்.

அரசாங்கத்தின் யோசனைகளுக்கு எதிராக - அனைத்துக் கட்சிகளையும் இணைத்து, பலம்வாய்ந்த கூட்டமைப்பொன்றை ஏற்படுத்தப் போவதாக, இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்ட சிஹல உறுமய கட்சியின் தலைவர் திலக் கருணாரத்ன தெரிவித்தார்.

### உயிர்த் தியாகம்...

தம்புள்ள தொகுதியில் இடம்பெற்ற கட்சி மாநாட்டின்போதே, அவா இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டைக் காப்பாற்ற மக்கள் விடுதலை முன்னணியுடன் கூட்டுச் சேருமாறு, 99 வீதமான கட்சி ஆதரவாளர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இடைக்கால நிர்வாக அலகு வழங்கப்பட்டால், நாட்டின் சுதந்திரம் பறிபோய், வடக்கில் தனி இராச்சியம் உருவாகும் என்றும், அதற்கு ஒரு போதும் இடமளிக்கப்படமாட்டாது என்றும் அவர் மேலும் கூறியிருக்கிறார்.

### கிழக்குப்...

கருத்துக்கள் தொடர்பாகவும், தலைவர் பிரபாகரனிடம் தெரிவித்தேன்.

தலைவர் பிரபாவின் பின்னால், அங்குள்ள மக்கள் அணிதிரண்டு நிற்கும் செய்தியை வெளிப்படுத்தியதாகவும், அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

## மடுமாதா உற்சவம்

(கொழும்பு)

மடுமாதா ஆலய உற்சவம் எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்த உற்சவகாலத்தில், இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுடாக ஏனைய பிரதேசங்களுக்கு பக்தர்கள் செல்ல அனுமதிப்பதற்கான நேரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 12 ஆம் திகதிவரை, காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரையும்,

12 ஆம் திகதி முதல், 14 ஆம் திகதி வரை காலை 6 மணிமுதல் இரவு 10 மணிவரையும்,

14 ஆம், 15 ஆம் திகதிகளில்- 24 மணிநேரமும்

இராணுவக் கட்டுப்பாட்டுப் பாதைகளினுடாக, மடுமாதா உற்சவத்திற்குப் பக்தர்கள் செல்வதற்கு உரிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இராணுவ உயர் அதிகாரிகளுடன் மன்னார் மாவட்ட ஆயர் மேற்கொண்ட பேச்சுக்களையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## கண்ணிவெடி அகற்றலில் நவீன சாதனங்கள்

(யாழ்ப்பாணம்)

புதிய கண்ணிவெடியகற்றும் சாதனங்களைப் பயன்படுத்தி வெடிபொருட்களை அகற்றும் நடவடிக்கை நேற்று இயக்கச்சியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மனிதநேய கண்ணிவெடியகற்றும பிரிவே, நவீன சாதனங்களை இப்பணிக்காக பயன்படுத்த ஆரம்பித்துள்ளது.

### ஜப்பானிய...

பது குறித்து ஆராய்ந்ததுடன், இராஜதந்திர சேவையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளுக்கு, மொழி அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான புலமைப் பரிசில் வழங்கவும் - யானோ இணக்கம் தெரிவித்துள்ளார்.

### கூரை...

வைக்கப்பட்டிருப்பதாக கூறினார்.

கைதியின் கோரிக்கைகள் குறித்து சட்டமா அதிபருடன் கலந்துரையாடவுள்ளதாகவும் சிறைச்சாலை ஆணையாளர் தெரிவித்தார்.

# கிளிநொச்சியில் நேற்று நடந்த தமிழ்ப்பெயர் கையேடு வெளியீடு

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகளின் தமிழ் வளர்ச்சிக் கழகத்தினரால் - உருவாக்கப்பட்ட 46 ஆயிரம் தூய தமிழ்ப்பெயர்களைக் கொண்ட 'தமிழ்ப் பெயர் கையேடு' நூல் வெளியீட்டு விழா - நேற்றுமாலை 3 மணியளவில் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

விடுதலைப் புலிகளின் நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழேந்தி தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், தமிழீழத் தேசியக் கொடியை விடுதலைப் புலிகளின் அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றிவைக்க, பொதுச்சுடரினை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் இராசநாயகம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு கல்வி வலயப்பணிப்பாளர்கள் சு.அரியரட்ணம், குருகுலராஜா ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

இந்த நூலின் மதிப்பீட்டு உரையினை திருமதி மனோன்மணி சண்முகதாஸ் நிகழ்த்தினார்.



தலைமையுரை நிகழ்த்தும் தமிழேந்தி



பண்டிதர் பரந்தாமன் உரையாற்றுகிறார்.



இந்திய சாஸ்திரியார் வருகை

முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு வருகைதந்துள்ளார்
பரம்பரை ஜோதிடர் புகழ்பெற்ற

S.N.குமாரசாமி

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, தொழில் முன்னேற்றம் இன்மை, கல்வித் தடையா? குழந்தைப் பாக்கியம், தீராத வியாதியா? மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும். (காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை)

ஸ்ரான்லி லொட்ஜ்

இல.711, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். T.P. 077 - 6080660, 021 - 2226188
(யாழ்.இந்துக் கல்லூரிக்கு அண்மையில்)

(சி-1299)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 05.08.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.